## ‘கிளாட்’ தேர்வில் வெற்றி பெற்று- நாக்பூர் தேசிய சட்டப் பல்கலையில் பயில்வதற்குத் தேர்வு!

# “புதுமை pen” பெற்ற ”புதுமைப்பெண்” ராகிணி!

### வெற்றிகள் குவிக்க – பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்து!

சென்னை, ஜூன் 18 –

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:

“CLAT தேர்வில் வெற்றி பெற்று நாக்பூர் தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குத் தேர்வாகியுள்ளார். திருச்சி மிளகுப்பாறை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவி ராகிணி.

தஞ்சாவூர் மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு திருச்சி திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் காண்பதற்குத் திரண்டிருந்த பொதுமக்கள், கழகத் தொண்டர் களுக்கு நடுவே நின்றிருந்தார் ”நான் முதல்வன்” உருவாக்கிய புதுமைப்பெண் ராகிணி.

மாணவியைக் கண்ட முதலமைச்சர் அவர்கள், தனது பேனாவை வழங்கி, பொன்னாடை அணிவித்து வாழ்த்துகள் கூறி மகிழ்ந்தார்.

“புதுமை pen” பெற்ற ”புதுமைப் பெண்” ராகிணியின் கல்விப்பயணம் மிகச்சரியான இலக்கை எட்டி, பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துகள்.”

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு - கடந்த 4 ஆண்டுகளில் மட்டும்

# மாணவி கிருத்திகா போல 900க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் - தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வு!

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!



சென்னை, ஜூன் 18-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ‘எக்ஸ்’ தள பதிவு வருமாறு:-

“மாணவி கிருத்திகா கல்வியால் பெற்ற வெற்றியை அவ்வூர் மக்கள் அன்பொழுகக் கொண்டாடுகிறார்கள்.

அந்தக் கொண்டாட்டத்தில் நாங்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகான நான்கு ஆண்டுகளில் மட்டும் மாணவி கிருத்திகாவைப் போல 900க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வாகியுள்ளார்கள்.

இந்நேரத்தில் அம்மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கூடவே பயணிக்கிறோம். மகிழ்ச்சியோடும் தன்னம்பிக்கையோடும் படியுங்கள்.”

இவ்வாறு அப்பதிவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யமொழி பெருமி

## பெரம்பலூரில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பெரம்பலூர், ஜூன் 18 -

பெரம்பலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு,

கௌதமபுத்தர் அறக்கட்டளையில் உள்ள 110 குழந்தைகளுக்கு போர்வை, பாய், துண்டு மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களையும் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன்,

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர் எம். இராஜ்குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன்,

தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜய், சுதா, தினேஷ், சிவனேசன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆனந்தன், சுல்தான, கலைச்செல்வன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரக் கழகங்கள் பிரிப்பு திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கடந்த 30.05.2025 அன்ற ‘முரசொலி’யில் வெளிவந்த திருநெல்வேலி மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருநெல்வேலி கிழக்கு – திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரக் கழகங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

தச்சநல்லூர் தெற்கு, பாளையங்கோட்டை தெற்கு, பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் மேற்கு, மேலப்பாளையம் கிழக்கு ஆகிய 5 பகுதிக் கழகங்கள் அடங்கிய திருநெல்வேலி மேற்கு மாநகரம், இனி **‘திருநெல்வேலி கிழக்கு மாநகரம்’** என பெயர் மாற்றப்பட்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இம்மாநகரப் பொறுப்பாளராக **திரு.ஏஎல்பி.தினேஷ்** அவர்களும்;

தச்சநல்லூர் வடக்கு, நெல்லை–பேட்டை கிழக்கு, நெல்லை–பேட்டை மேற்கு ஆகிய 3 பகுதிக் கழகங்கள் அடங்கிய திருநெல்வேலி கிழக்கு மாநகரம், இனி **‘திருநெல்வேலி மேற்கு மாநகரம்’** என பெயர் மாற்றப்பட்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இம்மாநகரப் பொறுப்பாளராக **திரு.சு.சுப்பிரமணியன்** அவர்களும் தொடர்ந்து செயல்படுவார்கள்.

அதுபோலவே, பாளையங்கோட்டை வடக்கு பகுதி, இனி ‘பாளையங்கோட்டை தெற்கு பகுதி’என பெயர் மாற்றப்பட்டு , ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இப்பகுதிக் கழகப் பொறுப்பாளராக **திரு.அ.செல்லத்துரை** அவர்களும்; பாளையங்கோட்டை தெற்கு பகுதி, இனி ‘பாளையங்கோட்டை வடக்கு பகுதி’என பெயர் மாற்றப்பட்டு , ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இப்பகுதிக் கழகப் பொறுப்பாளராக **திரு.செய்யது முகைதீன்** அவர்களும் செயல்படுவார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அந்தந்த பகுதிக் கழகத்திற்குட்பட்ட வார்டுகள் தொடர்ந்து அந்த பகுதிக் கழகத்திற்குட்பட்டே இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 17.06.2025 | மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் | வெள்ளிவாயல் சாவடி | முனைவர் பொன்னேரி சிவா, கா.ராஜராஜேஷ்வரி |
| 2 | | மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் | சோம்பட்டு | தூத்துக்குடி எட்டையபுரம் தமிழ்ப் பிரியன், ஆஷிகா பர்வின் |
| 3 | | மீஞ்சூர் பேரூர் | பஜார் வீதி, மீஞ்சூர் | தமிழ் சாதிக், ஜெ.பாலசந்தர் |
| 4 | 19.06.2025 | பூண்டி வடக்கு ஒன்றியம் | ஒதப்பை | கா.ராஜராஜேஷ்வரி |
| 5 | | பூண்டி கிழக்கு ஒன்றியம் | சீத்தஞ்சேரி | விக்னேஷ் உதயன் |
| 6 | 20.06.2025 | எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் | வடமதுரை | எழும்பூர் கோபி, விக்னேஷ் உதயன் |
| 7 | | எல்லாபுரம் தெற்கு ஒன்றியம் | கன்னிகைப்பேர் | ‘முரசொலி’ மூர்த்தி |
| 8 | | ஊத்துக்கோட்டை பேரூர் | பேரூராட்சி அலுவலகம் பின்புறம் | ‘குடியாத்தம்’ பாரி |
| 9 | 22.06.2025 | மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் | திருப்பாலைவனம் | வாசு கருணாநிதி |
| 10 | | பொன்னேரி நகரம் | அம்பேத்கர் சிலை அருகில் | நாகம்மை கருப்பையா, ஆஷிகா பர்வின் |
| 11 | | சோழவரம் வடக்கு ஒன்றியம் | மாதவரம் | கா.ராஜராஜேஸ்வரி |
| 12 | | ஆரணி பேரூர் | பஜார் வீதி | ஜெ.பாலசந்தர் |
| 13 | 30.06.2025 | கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் | அமரம்பேடு | ‘அத்திப்பட்டு’ சாம்ராஜ் |
| 14 | | கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் | பெத்திக்குப்பம் | ஆஷிகா பர்வின் |
| 15 | | கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் | கவரைப்பேட்டை | வண்ணை புகாரி, விக்னேஷ் உதயன் |
| 16 | | கும்மிடிப்பூண்டி பேரூர் | கோட்டக்கரை | திருச்சி சேகர், ஜெ.பாலசந்தர் |

**திருவள்ளூர்**
நாள் : 16-06-2025





## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | பகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 18.06.2025 | கொளத்தூர் கிழக்குப் பகுதி | திரு.வி.க. நகர் பேருந்து நிலையம் அருகில் | வழக்கறிஞர் இந்திரஜித், திருப்பூர் மகிழவன் |
| 2 | | கொளத்தூர் மேற்குப் பகுதி | மக்காராம் தோட்டம், கொளத்தூர். | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 3 | 20.06.2025 | துறைமுகம் கிழக்குப் பகுதி | ஏழுகிணறு தெரு, அம்மன் கோவில் தெரு சந்திப்பு. | கரூர் முரளி, மு.மு.முஸ்தாக் |
| 4 | | துறைமுகம் மேற்குப் பகுதி | இழக்கட்டு பிள்ளையார் கோவில், அண்ணா பிள்ளை தெரு, வரதா மூர்த்தி அப்பன் தெரு சந்திப்பு. | கனல் கங்கா, அ.தஸ்னீம் பானு |
| 5 | 22.06.2025 | அம்பத்தூர் வடக்குப் பகுதி | எம்.டி.எச். ரோடு, பஜார் வீதி (முருகன் கோயில் அருகில்) | ஆவடி பாஸ்கர், க.ஹேமநாதன் |
| 6 | | அம்பத்தூர் தெற்குப் பகுதி | ஏசியாத் குடியிருப்பு, அண்ணா நகர், மேற்கு விரிவு. | சைதை சாதிக், க.சுபத்ரா |
| 7 | | அம்பத்தூர் கிழக்குப் பகுதி | கொரட்டூர் பேருந்து நிலையம், கொரட்டூர். | சேப்பாக்கம் பிரபாகரன், சாய் ரித்திக் சக்திவேல் |
| 8 | 23.06.2025 | வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி | பழனி ஆண்டவர் கோயில் சந்திப்பு, அயனாவரம். | சேப்பாக்கம் பிரபாகரன், தி.கோகுல் |
| 9 | | வில்லிவாக்கம் மேற்குப் பகுதி | சிட்கோநகர் 3–வது பிரதான சாலை, வில்லிவாக்கம். | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, எஸ்.மாறன் |
| 10 | 27.06.2025 | எழும்பூர் வடக்குப் பகுதி | சிவராவ் சாலை, புளியந்தோப்பு. | வழக்கறிஞர் இந்திரஜித், செ.ஜோதி |
| 11 | | எழும்பூர் தெற்குப் பகுதி | அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு. | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 12 | 29.06.2025 | திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி | பி.எஸ்.மூர்த்தி நகர், ஆடு தொட்டி அருகில், புளியந்தோப்பு | ஈரோடு இறைவன், ர.சந்தோஷ் ஜெய் |
| 13 | | திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி | வெங்கட்டம்மாள் சமாதி தெரு (ஐந்து விளக்கு அருகில்) | எம்.எல்.நாதன், நா.நரேன் கௌதம் |

**சென்னை**
நாள் : 16-06-2025

